# கோயம்புத்துார் மாநகராட்சி

**அனுப்புநர்**

**திரு செ.ம.வேலுசாமி**
**வணக்கத்திற்குரிய மேயர்,**
கோயம்புத்துார் மாநகராட்சி,

**பெறுநர்**

மதிப்பிற்குரிய துணை மேயர்,
நிலைக்குழு தலைவர்கள்,
நியமனக்குழு உறுப்பினர்,
வார்டுக்குழு தலைவர்கள் மற்றும்
அனைத்து மாமன்ற உறுப்பினர்கள்,
கோயம்புத்துார் மாநகராட்சி.

அனைத்துப் பிரிவுத் தலைமைகள்,
கோயம்புத்துார் மாநகராட்சி.

சட்டமன்ற உறுப்பினர்கள்
(சிங்காநல்லுார், கோவை தெற்கு,
கோவை வடக்கு, தொண்டாமுத்துார்
கவுண்டம்பாளையம், கிணத்துக்கடவு
சட்டமன்ற தொகுதிகள்),

பாராளுமன்ற உறுப்பினர்கள்
(கோவை , மற்றும் பொள்ளாச்சி
பாராளுமன்றத் தொகுதிகள்)

**ந.க.எண் : 13841 / 2012 / எம்சி. 8 நாள் : 27 .12.2012**

**அய்யா /அம்மா,**

**பொருள் :** கோயம்புத்துார் மாநகராட்சி - மாமன்ற அவசரக் கூட்டம் நடைபெறுதல் - நிகழ்ச்சி நிரல் அனுப்புதல் - தொடர்பாக.

-----------

கோயம்புத்துார் மாநகராட்சியின் மாமன்ற அவசரக் கூட்டம் வருகின்ற **28.12.2012 வெள்ளிக்கிழமை பிற்பகல் 2.30** மணிக்கு வணக்கத்திற்குரிய மேயர் அவர்கள் தலைமையில் விக்டோரியா ஹால் மாமன்றக் கூடத்தில் நடைபெற உள்ளது. அதுசமயம் அனைத்து மாமன்ற உறுப்பினர்களும் அனைத்து துறைத் தலைமை அலுவலர்களும் தவறாது கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். இக்கூட்டத்திற்கான நிகழ்ச்சி நிரல் இத்துடன் இணைத்து அனுப்பப்படுகிறது.

**செ.ம. வேலுசாமி**
**மேயர்**
கோயம்புத்துார் மாநகராட்சி

**இணைப்பு : 1**

**நகல் :**

ஆணையாளர் அவர்கள், கோயம்புத்துார் மாநகராட்சி
துணை ஆணையாளர் அவர்கள், கோயம்புத்துார் மாநகராட்சி

## மாமன்ற அவசரக் கூட்டம் - டிசம்பர் 2012

## நிகழ்ச்சி நிரல்

| பொருளடக்கம் | |
|---|---|
| | அ) திருக்குறள் வாசித்து மன்ற நிகழ்ச்சியை துவக்குதல்<br>ஆ) தீண்டாமையை ஒழிக்க மேற்கொள்ளும் உறுதிமொழி |
| **வ.எண்** | **இ). தீர்மானத்திற்குரிய பொருள்கள்** |
| 1 | பணியமைப்பு – கோயம்புத்தூர் மாநகராட்சி – அரசாணையின்படி அப்பழுக்கின்றி 25 ஆண்டுகள் பணி முடித்த பணியாளர்களுக்கு ரூ.2,000/– பணத்தொகை வெகுமதியாக நற்சான்றுடன் வழங்குதல் – மாமன்ற ஒப்புதல் கோருதல் - தொடர்பாக |
| 2 | பொறியியல் பிரிவு - இந்திய விமானப்படை நிகழ்ச்சி நடைபெறுதல் - நிகழ்ச்சிக்கு 10 எண்ணிக்கையிலான நடமாடும் கழிவறைகள் வழங்குதல் -ஆணையர் அவர்களின் உத்திரவின்படி வழங்கப்பட்டது – மாமன்ற பின்னேற்பு கோருதல் - தொடர்பாக |
| 3 | மத்திய மண்டலம் -வருவாய் பிரிவு -வார்டு எண் 82 - வின்சென்ட் ரோட்டில் உள்ள வணிக வளாக கடைகள் - ஒதுக்கீடு செய்யப்பட்டு ஒன்பது ஆண்டுகள் முடிவடைந்த கடைகளுக்கு அரசின் ஆணைப்படி வாடகையை உயர்வு செய்து உரிமம் புதுப்பித்தல் - மாமன்ற ஒப்புதல் கோருதல் - தொடர்பாக |
| 4 | மத்திய மண்டலம்- வருவாய் பிரிவு - வார்டு எண். 84 காமதேனு மார்க்கெட் வணிக வளாக கடைகள் மற்றும் தர்மராஜா கோயில் வீதி கடைகள் - ஒதுக்கீடு செய்யப்பட்டு ஒன்பது ஆண்டுகள் முடிவடைந்த கடைகளுக்கு அரசின் ஆணைப்படி வாடகையை உயர்வு செய்து உரிமம் புதுப்பித்தல் - மாமன்ற ஒப்புதல் கோருதல் - தொடர்பாக |
| 5 | மத்திய மண்டலம் - வார்டு எண்.50 - டாடாபாத் ராஜு ரோடு வணிகவளாக கடைகள் - ஒதுக்கீடு செய்யப்பட்டு - ஒன்பது ஆண்டுகள் முடிவடைந்த கடைகளுக்கு அரசின் ஆணைப்படி வாடகையை உயர்வு செய்து – உரிமம் புதுப்பித்தல் - மாமன்ற ஒப்புதல் கோருதல் - தொடர்பாக |
| 6 | பொறியியல் பிரிவு - மேற்கு மண்டலத்திற்குட்பட்ட 12 எண்ணிக்கையில் உள்ள மாநகராட்சி ஆரம்பப்பள்ளி, உயர்நிலைப்பள்ளி மற்றும் மேல்நிலைப்பள்ளிகளில் ஒரு வருட காலத்திற்கு தூய்மைப் பணிகள் மேற்கொள்ளுதல்–ஒப்பந்தப்புள்ளி பெறப்பட்டது – மதிப்பீட்டைக் காட்டிலும் கூடுதல் சதவீதம் பெறப்பட்ட பணிகள் – ஒப்பந்தப்புள்ளியினை ஏற்றல் - மாமன்றத்தின்அனுமதி வேண்டுதல்– தொடர்பாக |
| 7 | பொது சுகாதாரப் பிரிவு - கோயம்புத்தூர் தெற்கு மற்றும் வடக்கு வட்டங்களில் முதியோர்/விதவை உதவித்தொகை கோரி பெறப்பட்ட மனுக்கள் – வறுமைக் கோட்டிற்கு கீழ் உள்ளோர் பட்டியல் எண் வழங்குவது – மாமன்ற அனுமதி கோருதல் - தொடர்பாக |
| 8 | கோவை மாநகராட்சி - மேற்கு மண்டலம் - குடிநீர் பிரிவு சிறுவாணி குடிநீர் விநியோகம் குறைந்துவிட்டபடியால் பில்லூர் குடிநீர் விநியோகம் மேற்கொள்ள சங்கனூர் பள்ளத்தில் இருந்து மேட்டுப்பாளையம் சாலை வரை M.S. குழாய் பதித்தல் பணிக்கென தயாரிக்கப்பட்ட மதிப்பீடு ரூ.64.60 இலட்சத்திற்கு மாமன்றத்தின் நிர்வாக அனுமதி கோருதல். |
| 9 | கோயம்புத்தூர் மாநகராட்சி வடக்கு மண்டலத்திற்குட்பட்ட வார்டு எண். 3 மற்றும் 31 –லுள்ள வணிகவளாக கடைகள் - பொது மறுமின் ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி பெறப்பட்டது – மாமன்ற ஒப்புதல் கோருவது – தொடர்பாக. |
| 10 | கோயம்புத்தூர் மாநகராட்சி மத்திய மண்டலத்திற்குட்பட்ட வார்டு எண். 50-ல் உள்ள வணிகவளாக கடைகள் - பொது மறுமின் ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி பெறப்பட்டது – மாமன்ற ஒப்புதல் கோருவது – தொடர்பாக. |

| | |
|---|---|
| **11** | மத்திய மண்டலம் -வருவாய் பிரிவு -வார்டு எண் 83 – முத்துவிநாயகர் கோவில் ரோடு வணிக வளாக கடைகள் ஒதுக்கீடு செய்யப்பட்டு மூன்றாண்டுகள் முடிவடைந்த கடைகளுக்கு 15 சதவீதம் வாடகை உயர்வு செய்து ஒன்பது ஆண்டுகள் முடிவடைந்த கடைகளுக்கு உரிமம் புதுப்பித்தல் - மாமன்ற ஒப்புதல் கோருதல் - தொடர்பாக |
| **12** | பணியமைப்பு – கோயம்புத்தூர் மாநகராட்சி – எல்லை விரிவாக்கம் செய்யப்பட்டது – புதிய பணியிடங்கள் தோற்றுவித்தல் – அரசுக்கு பிரேரணை அனுப்ப மாமன்றத்தின் அனுமதி வேண்டுவது –தொடர்பாக |

**நன்றியுரை**

**அ)** **திருக்குறள்**

நிலவரை நீள்புகழ் ஆற்றின் புலவரைப்
போற்றாது புத்தேள் உலகு

**(குறள் - 234)**

**விளக்கம்**

அறிவாற்றல் பெற்றவர்களையும், தன்னலமின்றி வாழ்வில் நிலையான புகழைச் சேர்த்தவர்களையும் வருங்காலப் புதுமை உலகு போற்றும்.

**திருவள்ளுவர்.**

---

**ஆ) தீண்டாமையை ஒழிக்க மேற்கொள்ளும் உறுதிமொழி**

இந்திய அரசியலமைப்பின்பால், இடைவிடாத, உளமார்ந்த பற்றுள்ள இந்தியக் குடிமகன்/குடிமகள் ஆகிய நான், நமது அரசியல் அமைப்பின்படி, தீண்டாமை ஒழிக்கப்பட்டுவிட்டது என்பதை அறிவேன். தீண்டாமையை அடிப்படையாகக் கொண்டு, எவர்மீதும் தெரிந்தோ, தெரியாமலோ சமூக வேற்றுமையை, மனம், வாக்கு, செயல் என்ற எந்த வகையிலும் கடைபிடிக்க மாட்டேன் என்று இதனால் உளமார உறுதியளிக்கிறேன். அரசியலமைப்பின் அடிப்படைக் கருத்திற்கிணங்க, சமய வேறுபாடற்ற சுதந்திர சமுதாயத்தை உருவாக்குவதில் நேர்மையுடனும், உண்மையுடனும் பணியாற்றுவது எனது கடமையாகும் என்பதையும் உணர்வேன். இந்திய அரசியல் அமைப்பின்பால் எனக்குள்ள முழுப்பற்றிற்கு இது என்றென்றும் எடுத்துக்காட்டாக விளங்கும் என்றும் இதனால் உளமாற உறுதியளிக்கிறேன்.

## சிறப்புத் தீர்மானம்

மாண்புமிகு தமிழக முதல்வர் இதய தெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்கள் நேற்று டெல்லியில் நடைபெற்ற ( National Development Council ) தேசிய வளர்ச்சி கூட்டத்தில் கலந்து கொண்டு தமிழக மக்களின், தமிழ்நாட்டின் பிரச்சினைகள் குறித்து உரையாற்றிய நேரத்தில் ஒரு நாட்டின் முதல்வருக்கு, 7½ கோடி மக்களின் பாதுகாவலராக அத்தியாவசிய பிரச்சினைகளான மின் தட்டுப்பாடு, காவிரி பிரச்சினை குறித்தும், தஞ்சை வாழ் டெல்டா விவசாயிகளின் கண்ணீரை துடைத்திடும் வகையில் நடவடிக்கை தேவை என மத்திய அரசுக்கு எடுத்துரைத்திட வாய்பளிக்காமல், மாற்றான்தாய் மனபான்மையோடு வெறும் 10 நிமிடத்தில் பேச்சை முடித்திட வலியுறுத்தி மணி அடித்து உட்கார சொல்வது தமிழக மக்களை வஞ்சிக்கிற செயலாகும் என தெரிவித்து நமது முதல்வர் அம்மா அவர்கள் வெளிநடப்பு செய்துள்ளார்.

இது மாண்புமிகு அம்மா அவர்களுக்கு ஏற்பட்ட அவமானம் அல்ல, ஒட்டு மொத்த தமிழகத்திற்கும், ஒவ்வொரு தமிழருக்கும் ஏற்பட்ட அவமானம். பிரச்சினைகளை கேட்டு தீர்வு காண கையாலாகாத மத்திய அரசை நம் மாமன்றத்தின் சார்பில் வன்மையாக கண்டிக்க வேண்டும் என்ற சிறப்புத் தீர்மானம் வணக்கத்திற்குரிய மேயர் அவர்களின் அனுமதியுடன் 23-வது வார்டு மாமன்ற உறுப்பினர் திருமதி எஸ். மணிமேகலை அவர்களால் முன்மொழியப்பட்டு, வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழு தலைவர் திரு ஆர். பிரபாகரன் அவர்களால் வழிமொழியப்பட்டது.

## சிறப்புத் தீர்மானம் எண் 1 நாள் 28.12.2012

ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

---

## சிறப்புத் தீர்மானம்

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களுக்கு கோவை மாநகராட்சி மாமன்றமானது நெஞ்சார்ந்த புத்தாண்டு வாழ்த்துக்களை சமர்ப்பித்து பெருமகிழ்ச்சி அடைகிறது. மேலும் கோவை மாநகராட்சி மக்களுக்கும் நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்களுக்கும், கோவை மாநகராட்சி அனைத்து அலுவலர்களுக்கும், பத்திரிக்கை, தொலைக்காட்சி நண்பர்களுக்கும் இம்மாமன்றம் நெஞ்சார்ந்த புத்தாண்டு வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறது என்ற சிறப்புத் தீர்மானம் வணக்கத்திற்குரிய மேயர் அவர்களால் கொண்டுவரப்பட்டது.

## சிறப்புத் தீர்மானம் எண் 2 நாள் 28.12.2012

ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

---

## சிறப்புத் தீர்மானம்

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்கள் தமிழகத்தை மின் மிகை மாநிலமாக மாற்றுவதற்கு சிறப்பான திட்டங்களை அறிவித்து மூன்று வருடங்களுக்குள் 3000 மெகாவாட் சூரிய ஒளி மின்சாரத்தை உற்பத்தி செய்ய இலக்கு நிர்ணயித்து, அதை நிறைவேற்றுவதற்கு சீறிய திட்டங்களை உருவாக்கி வருகிறார். அத்திட்டங்களுக்கு உறுதுணையாக இருக்கும் நோக்கத்துடன் மாநகராட்சி அலுவலகங்களில் உள்ள விளக்குகள் மற்றும் தெரு விளக்குகள் ஆகியவற்றை சூரிய ஆற்றல் மூலமாக இயக்குவதற்கு நடவடிக்கை எடுக்கவும், அதற்குரிய அனுமதியை வழங்க தமிழ்நாடு அரசைக் கோரும் பிரேரணையை அரசுக்கு அனுப்ப நடவடிக்கை எடுக்கவேண்டும். மேலும் ஒவ்வொரு வார்டிலும் முக்கிய சாலை சந்திப்புகள் மற்றும் அவசியமான மற்ற இடங்களிலும் சோலார் விளக்குகளை பொருத்தி இயக்கவேண்டும் என்ற சிறப்புத் தீர்மானம் வணக்கத்திற்குரிய மேயர் அவர்களின் அனுமதியுடன் 62வது வார்டு மாமன்ற உறுப்பினர் திரு சிங்கை எஸ். பாலன் அவர்களால் முன்மொழியப்பட்டு, திரு. ம. ராஜேந்திரன் நியமனக்குழு உறுப்பினர் அவர்களால் வழிமொழியப்பட்டது.

## சிறப்புத் தீர்மானம் எண் 3 நாள் 28.12.2012

ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

---

## சிறப்புத் தீர்மானம்

கோயம்புத்தூர் மாநகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் சுவர் விளம்பரங்கள் செய்வது, மரங்களின்மீது ஆணி அடித்து ப்ளக்ஸ் போர்டு வைத்து விளம்பரம் செய்வது நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது. இதை வரன்முறைப்படுத்த வேண்டிய அவசியம் தற்போது ஏற்பட்டுள்ளது.

எனவே மரங்களின் மீது ஆணி அடித்து விளம்பரம் செய்வதை தடை செய்யவும், சுவர் விளம்பரங்களை மாநகராட்சியில் எந்தெந்த பகுதிகளில் அனுமதிக்கலாம் எனவும், சுவர் விளம்பரங்களுக்கு கட்டணம் நிர்ணயம் செய்யவேண்டும் எனவும், மாநகராட்சி எல்லைக்குள் உள்ள ரயில்வே நிர்வாகம், மத்திய அரசு நிறுவனங்கள் மற்றும் தனியார் நிறுவனங்களுக்கு சொந்தமான இடங்களில் சுவர் விளம்பரங்கள் செய்தால் மாநகராட்சி அனுமதி பெற்று மேற்கொள்ள வேண்டும் எனவும், இந்த நிபந்தனைகளை மீறுபவர்கள்மீது தக்க தண்டனை நடவடிக்கைகளை மாநகராட்சி நிர்வாகம் எடுக்கவேண்டும் என்ற சிறப்புத் தீர்மானம் வணக்கத்திற்குரிய மேயர் அவர்களின் அனுமதியுடன் வடக்கு மண்டல தலைவர் திரு பி.ராஜ்குமார் அவர்களால் முன்மொழியப்பட்டு, திரு ஆர். பிரபாகரன் வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழு தலைவர் அவர்களால் வழிமொழியப்பட்டது.

## சிறப்புத் தீர்மானம் எண் 4 நாள் 28.12.2012

ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

---

## சிறப்புத் தீர்மானம்

புதியதாக கட்டப்படும் வணிக உபயோக கட்டிடம், கல்வி நிறுவன கட்டிடங்கள், குடியிருப்பு கட்டிடங்கள் ஆகிய கட்டிடங்களுக்கு அனுமதி வழங்கப்படும்போது, அக்கட்டிடங்களில் சூரிய சக்தி மூலம் மின்சார இணைப்பு கட்டாயம் அமைக்கப்படவேண்டும் என்ற நிபந்தனையுடன் அனுமதி வழங்க உரிய உத்திரவு பிறப்பிக்கவும், இதனை அமுல்படுத்தும் கட்டிட உரிமையாளரை ஊக்குவிக்கும் வகையில் சிறப்பு திட்டங்களை அறிமுகப்படுத்தவும் அரசை கேட்டுக் கொள்ளலாம் என்ற சிறப்புத் தீர்மானம் வணக்கத்திற்குரிய மேயர் அவர்களின் அனுமதியுடன் நகரமைப்புக்குழு தலைவர் திரு கே.என். செந்தில்குமார் அவர்களால் முன்மொழியப்பட்டு, திருமதி. சாந்தாமணி தலைவர் கல்விக்குழு அவர்களால் வழிமொழியப்பட்டது.

## சிறப்புத் தீர்மானம் எண் 5 நாள் 28.12.2012

ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

---

## சிறப்புத் தீர்மானம்

கோயம்புத்தூர் மாநகராட்சியின் மாமன்ற கூட்ட நடவடிக்கைகளின்போது கூட்ட அரங்கின் உள்ளேயோ, அல்லது வெளியிலோ கோஷங்களை எழுப்பி மாமன்ற நடவடிக்கைகளுக்கு குந்தகம் ஏற்படும் வகையில் நடந்து கொள்ளும் மாமன்ற உறுப்பினர்கள்மீது கடுமையான நடவடிக்கை எடுக்கவேண்டும் என்ற சிறப்புத் தீர்மானம் வணக்கத்திற்குரிய மேயர் அவர்களின் அனுமதியுடன் திரு. ஆர். பிரபாகரன் வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழு தலைவர் அவர்களால் முன் மொழியப்பட்டு திரு. கே. ஆர். ஜெயராம் மண்டலத் தலைவர், கிழக்கு மண்டலம் அவர்களால் வழி மொழியப்பட்டது.

## சிறப்புத் தீர்மானம் எண் 6 நாள் 28.12.2012

ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

---

## சிறப்புத் தீர்மானம் எண் 7

கோயம்புத்தூர் மாநகராட்சியின் குடிநீர் தேவைக்கு பயன்பட்டு வரும் சிறுவாணி அணையின் நீர்மட்டம் எதிர்பாராத அளவிற்கு குறைந்து வருவதால் அத்திட்டத்தின்கீழ் பயனடைந்து வரும் பகுதிகளில் ஏற்படும் குடிநீர் பிரச்சனைகளை களைவதற்கு பில்லூர் II ம் குடிநீர் திட்ட குழாய்களை சிறுவாணி குடிநீர் குழாயுடன் இணைப்பது அவசியமானதாகும். அப்பணிகள் போர்க்கால அடிப்படையில் நடைபெற்று வருகின்றன. இப்பணிகளை திறம்பட செய்வதற்குத் தேவையான அனைத்து நடவடிக்கைகளை மேற்கொள்ள மாமன்றம் முன்அனுமதி அளிக்க வேண்டும் என்ற சிறப்புத் தீர்மானம் வணக்கத்திற்குரிய மேயர் அவர்களின் அனுமதியுடன் திரு. கே.ஆர். ஜெயராம் மண்டலத் தலைவர், கிழக்கு மண்டலம் அவர்களால் முன்மொழியப்பட்டு திரு ஆர். பிரபாகரன் வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழு தலைவர் அவர்களால் வழிமொழியப்பட்டது.

## சிறப்புத் தீர்மானம் எண் 7 நாள் 28.12.2012

ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

---

**பொருள் எண் 1**

**பொருள்:** பணியமைப்பு – கோயம்புத்தூர் மாநகராட்சி – அரசாணையின்படி அப்பழுக்கின்றி 25 ஆண்டுகள் பணி முடித்த பணியாளர்களுக்கு ரூ.2,000/– பணத்தொகை வெகுமதியாக நற்சான்றுடன் வழங்குதல் – மாநகராட்சி பணியாளர்களுக்கு வழங்க மாமன்றத்தின் ஒப்புதலுக்கு பொருள் சமர்ப்பிக்கப்படுவது – தொடர்பாக.

––––––––

அரசாணை எம்.எஸ்.எண்.390, நிதி (ஊதிய குழு) துறை, நாள்.07.11.2012–ன்படி, அப்பழுக்கின்றி 25 ஆண்டுகள் பணி முடித்த அரசு பணியாளர்களை ஊக்குவிக்கும் வகையில், ரூ.2000/– பணத்தொகையை வெகுமதியாக நற்சான்றுடன் வழங்க தெரிவிக்கப்பட்டுள்ளது.

கோயம்புத்தூர் மாநகராட்சியில், அப்பழுக்கின்றி 25 ஆண்டுகள் பணி முடித்த மாநகராட்சி பணியாளர்களுக்கு நற்சான்றுடன் ரூ.2000/– வெகுமதி வழங்கும் பொருட்டு அரசாணை நிலை எண். 390, நிதி (ஊதிய குழு) துறை, நாள்.07.11.2012–ஐ மாமன்றத்தின் ஒப்புதல் பெற பொருள் சமர்ப்பிக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு : ஒப்புதல் அளிக்கலாம். ந.க.எண்.13923 /2012/எம்.சி. 2

**மாநகர மன்ற தீர்மானம் எண் 307 நாள் 28.12.2012**

அலுவலகக் குறிப்பிற்கு ஒப்புதல் அளித்து தீர்மானிக்கப்பட்டது

---

**பொருள் எண் 2**

பொருள்: கோயம்புத்தூர் மாநகராட்சி – பொறியியல் பிரிவு – 10 எண்ணிக்கை நடமாடும் கழிப்பிடங்கள் வழங்குதல் – தொடர்பாக.

கோயம்புத்தூர் மாவட்டத்திற்குட்பட்ட சூலூரில் அமைந்துள்ள இந்திய விமானபடை நிலையத்தில் வரும் 18.12.2012 அன்று நடைபெறவுள்ள ஸ்டான்டர்ட் ப்ரசன்டேசன் பரேட் ( Standard Presentation Parade) நிகழ்ச்சிக்கு நம் நாட்டின் மேதகு ஜனாதிபதி அவர்கள் சிறப்பு விருந்தினராக கலந்து கொள்ள வருகை தரவுள்ளதாக சூலூர் விமானப்படை நிலைய தலைமை நிர்வாக அலுவலர் தமது 21.11.2012 தேதியிட்ட கடிதத்தில் தெரிவித்துள்ளார். இவ்விழாவிற்கு தமிழக மேதகு ஆளுநர் மற்றும் மாண்புமிகு முதலமைச்சர் ஆகியோரும் பங்கு பெறுவதாகவும் தெரிவித்துள்ளார்.

மேற்படி நிகழ்ச்சிக்கு சுமார் 2000 விருந்தினர்கள் பங்கு பெறவுள்ளதால் பத்து எண்ணிக்கையிலான நடமாடும் கழிப்பிடங்களை தேசிய நிகழ்ச்சியின் காரணத்தை கருத்தில் கொண்டு 18.12.2012 தேதியில் இலவசமாக பயன்படுத்துவதற்கு கோரியுள்ளதுடன் அவற்றினை எடுத்துச்சென்று மீண்டும் கொணர்ந்து சேர்க்க ஆகும் செலவினங்களை தாங்களே ஏற்றுக் கொள்வதாகவும் தெரிவித்துள்ளார்.

அவசர அவசியத்தை கருத்தில் கொண்டு மேற்படி 05.12.2012 தேதியிட்ட ஆணையர் அவர்களது உத்திரவின்படி 10 கழிவறைகளை இலவசமாக வழங்கியதற்கு பின்னேற்பு வழங்க வேண்டி மாமன்றத்திற்கு பொருள் சமர்பிக்கப்படுகின்றது.

அலுவலக குறிப்பு: அனுமதிக்கலாம். ந.க. எண் 13559/12/எம் டி4

**மாநகர மன்ற தீர்மானம் எண் 308 நாள் 28.12.2012**

அலுவலகக் குறிப்பிற்கு அனுமதி அளித்து தீர்மானிக்கப்பட்டது

---

## பொருள் எண் 3

பொருள் : கோயம்புத்தூர் மாநகராட்சி மத்திய மண்டலம் -வார்டு எண்.82 - வின்சென்ட் ரோட்டில் உள்ள வணிக வளாக கடைகள் - ஒதுக்கீடு செய்யப்பட்டு - ஒன்பது ஆண்டுகள் முடிவடைந்த கடைகளுக்கு அரசின் ஆணைப்படி வாடகையை உயர்வு செய்து – உரிமம் புதுப்பித்தல் - தொடர்பாக

பார்வை :
1) அரசாணை எண். 147 ந.நி.ம.கு.வ.(நநி4) துறை நாள். 30.12.2000.
2) அரசாணை எண். 92 ந.நி.ம.கு.வ துறை நாள். 03.07.2007.
3) வ.வி.ம.நி.குழு தீர்மான எண்.129 நாள்.22.10.2012.

*********

பார்வை 1 மற்றும் 2-ல் கண்ட அரசாணைகளின்படி நகர்புற உள்ளாட்சி அமைப்புகளுக்கு சொந்தமான கடைகளை பொது ஏலம் விடுவதை தவிர்த்து குத்தகையினை நீட்டித்தல் குறித்து நெறிமுறைகளை பின்பற்ற உத்திரவிடப்பட்ட 30.12.2000-ம் தேதிய நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (ந.நி.4) துறை அரசு ஆணை எண்.147-க்கு இணங்க மாமன்ற தீர்மான எண்.164 நாள் 28.10.2004-ன் படி மாதாந்திர உரிமக் கட்டணம் நிர்ணயம் செய்யப்பட்டு வசூல் செய்யப்பட்டு வருகிறது. கடைகளின் உரிமக்காலம் முடிவடைவதால் அரசாணை (நிலை) எண்.92–நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள்.03.07.07–ன் படி புதுப்பித்து 15% உயர்வு செய்து மாத வாடகை நிர்ணயம் செய்யவும் 9 ஆண்டுகள் முடிவடைந்த கடைகளுக்கு அரசாணையின்படி பொதுப்பணித்துறை வாடகை மதீப்பிடுகளின் அடிப்படையில் வாடகை நிர்ணயம் செய்யவும் உத்தரவிடப்பட்டுள்ளது.

பார்வை 3-ல் காணும் வரி வதிப்பு மற்றும் நிதிக்குழு தீர்மான எண்.129 நாள்.22.10.12-ன் படி

1. அரசாணை எண்.92 ந.நி.ம.கு.வ துறை நாள்.03.7.2007-ல் தெரிவித்து உள்ளவாறு ஒதுக்கீடு பெற்று 9 ஆண்டுகள் முடிவடைந்த கடைகளுக்கு வெளிசந்தை மதிப்பில் வாடகை உயர்வு செய்யவும், 9 ஆண்டுகள் முடிவடையாத கடைகளுக்கு 15% வாடகை உயர்வு செய்யவும் மாமன்றத்திற்கு பரிந்துரை செய்து தீர்மானிக்கப்பட்டது.

2. கடைகள் பற்றிய முழு விவரங்களுடன் மாமன்றத்திற்கு பொருள் வைத்து ஒப்புதல் பெற தீர்மானிக்கப்பட்டது.

அதன் அடிப்படையில் மத்திய மண்டலத்திற்குட்பட்ட வார்டு எண்.82-ல் வின்சென்ட் ரோட்டில் உள்ள 31 மாநகராட்சி வணிக வளாக கடைகள் ஒன்பது ஆண்டுகள் முடிவடைந்ததால் அக்கடைகளுக்கு அரசின் ஆணைப்படி தற்போதைய சந்தை மதிப்பின் அடிப்படையில் பொதுப்பணித்துறையின் வாடகை மதிப்பீட்டு கணக்கீட்டின்படி 01.01.2013 முதல் வாடகையினை உயர்வு செய்யலாம். (பட்டியல் இணைக்கப்பட்டுள்ளது) உயர்வு செய்யப்பட்ட வாடகையினை நிர்ணயம் செய்யவும் மற்றும் வித்தியாச வாடகையினை வசூல் செய்யவும், இத்துடன் சேவை வரி 12.36% யினை செலுத்துவதற்கும் ஒப்புக்கொள்ளும் உரிமதாரர்களுக்கு கடையினை புதிய வாடகை அடிப்படையில் உரிமம் புதுப்பித்து ஒப்படைக்கவும், ஒப்புக்கொள்ளாத உரிமதாரர்களின் கடைகளின் உரிமத்தை ரத்துசெய்து மறுஏலத்திற்கு கொண்டுவரவும், மான்றத்தின் அனுமதி வேண்டி பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு:- ஒப்புதல் அளிக்கலாம் ந.க.எண்.10119 /2012 / அ1 (ம)

## மாநகர மன்ற தீர்மானம் எண் 309 நாள் 28.12.2012

வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழு தீர்மானம் எண் 129 நாள் 22.10.2012ன் பரிந்துரையினை ஏற்று அலுவலகக் குறிப்பிற்கு ஒப்புதல் அளித்து தீர்மானிக்கப்பட்டது

---

## பொருள் எண் 4

பொருள் : கோயம்புத்தூர் மாநகராட்சி - மத்திய மண்டலம்-வார்டு எண்.84 காமதேனு மார்க்கெட் வணிக வளாக கடைகள் மற்றும் தர்மராஜா கோயில் வீதி கடைகள் - ஒதுக்கீடு செய்யப்பட்டு - ஒன்பது ஆண்டுகள் முடிவடைந்த கடைகளுக்கு அரசின் ஆணைப்படி வாடகையை உயர்வு செய்து – உரிமம் புதுப்பித்தல் - தொடர்பாக

பார்வை :
1. அரசாணை எண். 147 ந.நி.ம.கு.வ.(நநி4) துறை நாள். 30.12.2000.
2. அரசாணை எண். 92 ந.நி.ம.கு.வ துறை நாள். 03.07.2007.
3. வ.வி.ம.நி.குழு தீர்மான எண்.129 நாள்.22.10.2012.

*********

பார்வை 1 மற்றும் 2-ல் கண்ட அரசாணைகளின்படி நகர்புற உள்ளாட்சி அமைப்புகளுக்கு சொந்தமான கடைகளை பொது ஏலம் விடுவதை தவிர்த்து குத்தகையினை நீட்டித்தல் குறித்து நெறிமுறைகளை பின்பற்ற உத்திரவிடப்பட்ட 30.12.2000-ம் தேதிய நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (ந.நி.4) துறை அரசு ஆணை எண்.147-க்கு இணங்க மாமன்ற தீர்மான எண்.164 நாள் 28.10.2004-ன் படி மாதாந்திர உரிமக் கட்டணம் நிர்ணயம் செய்யப்பட்டு வசூல் செய்யப்பட்டு வருகிறது. கடைகளின் உரிமக்காலம் முடிவடைவதால் அரசாணை (நிலை) எண்.92–நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள்.03.07.07–ன் படி புதுப்பித்து 15% உயர்வு செய்து மாத வாடகை நிர்ணயம் செய்யவும் 9 ஆண்டுகள் முடிவடைந்த கடைகளுக்கு அரசாணையின்படி பொதுப்பணித்துறை வாடகை மதீப்பிடுகளின் அடிப்படையில் வாடகை நிர்ணயம் செய்யவும் உத்தரவிடப்பட்டுள்ளது.

பார்வை 3-ல் காணும் வரி வதிப்பு மற்றும் நிதிக்குழு தீர்மான எண்.129 நாள்.22.10.12-ன் படி

1. அரசாணை எண்.92 ந.நி.ம.கு.வ துறை நாள்.03.7.2007-ல் தெரிவித்து உள்ளவாறு ஒதுக்கீடு பெற்று 9 ஆண்டுகள் முடிவடைந்த கடைகளுக்கு வெளிசந்தை மதிப்பில் வாடகை உயர்வு செய்யவும், 9 ஆண்டுகள் முடிவடையாத கடைகளுக்கு 15% வாடகை உயர்வு செய்யவும் மாமன்றத்திற்கு பரிந்துரை செய்து தீர்மானிக்கப்பட்டது.
2. கடைகள் பற்றிய முழு விவரங்களுடன் மாமன்றத்திற்கு பொருள் வைத்து ஒப்புதல் பெற தீர்மானிக்கப்பட்டது.

அதன் அடிப்படையில் மத்திய மண்டலத்திற்குட்பட்ட வார்டு எண்.84 காமதேனு மார்க்கெட் வணிக வளாகத்தில் உள்ள 11 தர்மராஜா கோயில் வீதியில் உள்ள 4 மாநகராட்சி வணிக வளாக கடைகள் மற்றும் தர்மராஜா கோவில் வீதி 2 வணிகவளாக கடைகள் (நாடார் வீதி) ஆகிய கடைகளுக்கு ஒன்பது ஆண்டுகள் முடிவடைந்ததால் அக்கடைகளுக்கு அரசின் ஆணைப்படி தற்போதைய சந்தை மதிப்பின் அடிப்படையில் பொதுப்பணித்துறையின் வாடகை மதிப்பீட்டு கணக்கீட்டின்படி வாடகையினை உயர்வு செய்யலாம். (பட்டியல் இணைக்கப்பட்டுள்ளது) உயர்வு செய்யப்பட்ட வாடகையினை நிர்ணயம் செய்யவும் மற்றும் வித்தியாச வாடகையினை வசூல் செய்யவும், இத்துடன் சேவை வரி 12.36% யினை செலுத்துவதற்கும் ஒப்புக்கொள்ளும் உரிமதாரர்களுக்கு கடையினை புதிய வாடகை அடிப்படையில் உரிமம் புதுப்பித்து ஒப்படைக்கவும், ஒப்புக்கொள்ளாத உரிமதாரர்களின் கடைகளின் உரிமத்தை ரத்துசெய்து மறுஏலத்திற்கு கொண்டுவரவும், மான்றத்தின் அனுமதி வேண்டி பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு ஒப்புதல் அளிக்கலாம் ந.க.எண்.10119 /2012 / அ1 (ம)

## மாநகர மன்ற தீர்மானம் எண் 310 நாள் 28.12.2012

வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழு தீர்மானம் எண் 129 நாள் 22.10.2012ன் பரிந்துரையினை ஏற்று அலுவலகக் குறிப்பிற்கு ஒப்புதல் அளித்து தீர்மானிக்கப்பட்டது

---

## பொருள் எண் 5

பொருள் : கோயம்புத்தூர் மாநகராட்சி மத்திய மண்டலம் - வார்டு எண்.50 - டாடாபாத் ராஜு ரோடு வணிகவளாக கடைகள் - ஒதுக்கீடு செய்யப்பட்டு - ஒன்பது ஆண்டுகள் முடிவடைந்த கடைகளுக்கு அரசின் ஆணைப்படி வாடகையை உயர்வு செய்து – உரிமம் புதுப்பித்தல் - தொடர்பாக

பார்வை :
1) அரசாணை எண். 147 ந.நி.ம.கு.வ.(நநி4) துறை நாள். 30.12.2000.
2) அரசாணை எண். 92 ந.நி.ம.கு.வ துறை நாள். 03.07.2007.
3) வ.வி.ம.நி.குழு தீர்மான எண்.129நாள்.22.10.2012.

*********

பார்வை 1 மற்றும் 2-ல் கண்ட அரசாணைகளின்படி நகர்புற உள்ளாட்சி அமைப்புகளுக்கு சொந்தமான கடைகளை பொது ஏலம் விடுவதை தவிர்த்து குத்தகையினை நீட்டித்தல் குறித்து நெறிமுறைகளை பின்பற்ற உத்திரவிடப்பட்ட 30.12.2000-ம் தேதிய நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (ந.நி.4) துறை அரசு ஆணை எண்.147-க்கு இணங்க மாமன்ற தீர்மான எண்.164 நாள் 28.10.2004-ன் படி மாதாந்திர உரிமக் கட்டணம் நிர்ணயம் செய்யப்பட்டு வசூல் செய்யப்பட்டு வருகிறது. கடைகளின் உரிமக்காலம் முடிவடைவதால் அரசாணை (நிலை) எண்.92–நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள்.03.07.07–ன் படி புதுப்பித்து 15% உயர்வு செய்து மாத வாடகை நிர்ணயம் செய்யவும் 9 ஆண்டுகள் முடிவடைந்த கடைகளுக்கு அரசாணையின் படி பொதுப்பணித்துறை வாடகை மதீப்பிடுகளின் அடிப்படையில் வாடகை நிர்ணயம் செய்யவும் உத்தரவிடப்பட்டுள்ளது.

பார்வை 3-ல் காணும் வரி வதிப்பு மற்றும் நிதிக்குழு தீர்மான எண்.129 நாள்.22.10.12-ன் படி

1. அரசாணை எண்.92 ந.நி.ம.கு.வ துறை நாள்.03.7.2007-ல் தெரிவித்து உள்ளவாறு ஒதுக்கீடு பெற்று 9 ஆண்டுகள் முடிவடைந்த கடைகளுக்கு வெளிசந்தை மதிப்பில் வாடகை உயர்வு செய்யவும், 9 ஆண்டுகள் முடிவடையாத கடைகளுக்கு 15% வாடகை உயர்வு செய்யவும் மாமன்றத்திற்கு பரிந்துரை செய்து தீர்மானிக்கப்பட்டது.
2. கடைகள் பற்றிய முழு விவரங்களுடன் மாமன்றத்திற்கு பொருள் வைத்து ஒப்புதல் பெற தீர்மானிக்கப்பட்டது.

அதன் அடிப்படையில் மத்திய மண்டலத்திற்குட்பட்ட வார்டு எண். 50 டாடாபாத் ராஜு ரோட்டில் உள்ள 15 மாநகராட்சி வணிக வளாக கடைகளில் கடை எண்.1,3,4 மற்றும் 5 கடைகள் (4கடைகள்) மறு ஏலம் கொண்டுவரப்பட்டுள்ளது. மேலும் 11கடைகள் ஒன்பது ஆண்டுகள் முடிவடைந்ததால் அக்கடைகளுக்கு அரசின் ஆணைப்படி தற்போதைய சந்தை மதிப்பின் அடிப்படையில் பொதுப்பணித்துறையின் வாடகை மதிப்பீட்டு கணக்கீட்டின்படி வாடகையினை உயர்வு செய்யலாம். (பட்டியல் இணைக்கப்பட்டுள்ளது) உயர்வு செய்யப்பட்ட வாடகையினை நிர்ணயம் செய்யவும் மற்றும் வித்தியாச வாடகையினை வசூல் செய்யவும், இத்துடன் சேவை வரி 12.36% யினை செலுத்துவதற்கும் ஒப்புக்கொள்ளும் உரிமதாரர்களுக்கு கடையினை புதிய வாடகை அடிப்படையில் உரிமம் புதுப்பித்து ஒப்படைக்கவும், ஒப்புக்கொள்ளாத உரிமதாரர்களின் கடைகளின் உரிமத்தை ரத்துசெய்து மறுஏலத்திற்கு கொண்டுவரவும், மான்றத்தின் அனுமதி வேண்டி பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு ஒப்புதல் அளிக்கலாம் ந.க.எண்.10119 /2012 / அ1 (ம)

## மாநகர மன்ற தீர்மானம் எண் 311 நாள் 28.12.2012

வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழு தீர்மானம் எண் 129 நாள் 22.10.2012ன் பரிந்துரையினை ஏற்று அலுவலகக் குறிப்பிற்கு ஒப்புதல் அளித்து தீர்மானிக்கப்பட்டது

---

**பொருள் எண் 6**

பொருள் : கோயம்புத்தூர் மாநகராட்சி– மேற்கு மண்டலத்திற்குட்பட்ட 12 எண்ணிக்கையில் உள்ள மாநகராட்சி ஆரம்பப்பள்ளி, உயர்நிலைப்பள்ளி மற்றும் மேல்நிலைப்பள்ளிகளில் ஒரு வருட காலத்திற்கு தூய்மைப் பணிகள் மேற்கொள்ளுதல்–ஒப்பந்தப்புள்ளி பெறப்பட்டது – ஒப்பந்தப்புள்ளியினை ஏற்க மாமன்றத்தின்அனுமதி வேண்டுதல்– தொடர்பாக.

.........................

கோயம்புத்தூர் மாநகராட்சி பகுதியில் கீழ்க்கண்ட அபிவிருத்தி பணிகளுக்கு ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டு கீழ்க்கண்டவாறு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டுள்ளன. எனவே, இப்பணிகளுக்கு வரப்பெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளிகளை ஒப்பந்தப்புள்ளி திறனாய்வுக்குழு பரிசீலனை செய்து கீழ்க்கண்டவாறு பணிகளை ஏற்க மாமன்றத்திற்கு பரிந்துரை செய்துள்ளது.

| வ. எண் | கோப்பு எண் | பணியின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை (ரூ இலட்சத்தில்) | ஒப்பந்தப் புள்ளி நாள் | பெறப்பட்ட ஒப்பந்தப் புள்ளிகள் | தேர்வு செய்யப்பட்ட ஒப்பந்ததாரர் |
|---|---|---|---|---|---|---|
| 1 | 9524/ 2012/ எம்.டி.5 | கோயம்புத்தூர் மாநகராட்சி, மேற்குமண்டலத்திற்குட்பட்ட12 எண்ணிக்கையில் உள்ள மாநகராட்சி உயர்நிலைப் பள்ளி மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் காவலர்கள், துப்புரவு பணியாளர்கள், குழாய் பொருத்துனர், மின் கம்பியாளர் மற்றும் மேற்பார்வையாளர்களை கொண்டு ஒரு வருட காலத்திற்கு தூய்மைப் பணிகள் மேற்கொள்ளுதல் | 43.90 | 20/10/2012 முதல் அழைப்பு | 1.திரு.ஆர். மயில்வாணன், கோயம்புத்தூர் 4.89%அதிகம்<br><br>2.தி/ள்கே.சி.பி. இன்ஜினியர்ஸ் பிரைவேட் லிட், கோயம்புத்தூர் 20.28% அதிகம் | திரு.ஆர். மயில்வாணன், கோயம்புத்தூர் 4.89%அதிகம் |
| 2 | 9523/ 2012/ எம்.டி.5 | கோயம்புத்தூர் மாநகராட்சி, மேற்குமண்டலத்திற்குட்பட்ட12 எண்ணிக்கையில் உள்ள மாநகராட்சி ஆரம்பப் பள்ளிகளில் காவலர்கள், துப்புரவு பணியாளர்கள், குழாய் பொருத்துனர், மின்கம்பியாளர் மற்றும் மேற்பார்வையாளர்களை கொண்டு ஒரு வருட காலத்திற்கு தூய்மைப் பணிகள் மேற்கொள்ளுதல் | 41.40 | 20/10/2012 முதல் அழைப்பு | 1.திரு.ஆர். மயில்வாணன், கோயம்புத்தூர் 4.89 % அதிகம்<br><br>2.தி/ள்கே.சி.பி. இன்ஜினியர்ஸ் பிரைவேட் லிட், கோயம்புத்தூர் 21.59%அதிகம் | திரு.ஆர். மயில்வாணன், கோயம்புத்தூர் 4.89 % அதிகம் |

மேற்கண்ட ஒப்பந்தப்புள்ளிகளுக்கு ஒப்புதல் பெற மாமன்றத்திறகு பொருள் வைக்கப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு :</u>

வரிசை எண்கள்.1 மற்றும் 2ல் உள்ள பணிகள் குறிப்பிட்ட காலக்கெடுவிற்குள் முடிக்க வேண்டியிருப்பதாலும், மறு ஒப்பந்தப்புள்ளி கோரினால் இதைவிட குறைவான விலைப்புள்ளிகள் பெற வாய்ப்பு இல்லாத காரணத்தினாலும், இப்பணிகள் அத்தியாவசிய அடிப்படை வசதிகள் உள்ளதாலும் மதிப்பீட்டைக் காட்டிலும் கூடுதல் சதவீதம் பெறப்பட்ட பணிகளுக்கு பொறியியல் பணி விதிகளின்படி மாமன்றத்தின் அனுமதி பெற வேண்டியுள்ளதாலும் அனுமதிக்கலாம்.

ந.க.எண்.9524/2012/எம்.டி.5

**மாநகர மன்ற தீர்மானம் எண் 312 நாள் 28.12.2012**

அலுவலகக் குறிப்பிற்கு அனுமதி அளித்து தீர்மானிக்கப்பட்டது

---

**பொருள் எண் 7**

பொருள் : உதவித் தொகை – கோயம்புத்தூர் தெற்கு மற்றும் வடக்கு வட்டங்களில் முதியோர்/விதவை உதவித்தொகை கோரி பெறப்பட்ட மனுக்கள் – வறுமைக் கோட்டிற்கு கீழ் உள்ளோர் பட்டியல் எண் வழங்குவது – தொடர்பாக.

*******

கோயம்புத்தூர் தெற்கு மற்றும் வடக்கு வட்டங்களில் முதியோர்/விதவை உதவித் தொகை கோரி பெறப்பட்ட மனுக்களை சம்மந்தப்பட்ட கிராம நிர்வாக அலுவலர்கள் மற்றும் வருவாய் ஆய்வாளர்கள் விசாரணை செய்து **489** பயனாளிகளை கண்டறிந்து இவர்கள் வறுமைக் கோட்டிற்கு கீழ் உள்ளவர்கள் எனவும், இவர்களுக்கு உதவித் தொகை வழங்கவும் வட்டாட்சியர்கள், சமூக பாதுகாப்புத் திட்டம், கோயம்புத்தூர் (தெற்கு/வடக்கு) அவர்களால் பரிந்துரைக்கப்பட்டுள்ளது. இவற்றுள் :-

| | | |
|---|---|---|
| தகுதியுடைய பயனாளிகள் | : | 452 |
| மாநகராட்சி எல்லைக்கு அப்பாற்பட்ட பயனாளிகள் | : | 32 |
| தவறான முகவரி | : | 3 |
| இறந்து போனவர்கள் பெயர் | : | 2 |
| மொத்தம் | : | 489 |

எனவே வட்டாட்சியர்கள், சமூக பாதுகாப்புத்திட்டம், கோயம்புத்தூர் தெற்கு மற்றும் வடக்கு அவர்களின் பரிந்துரையினையேற்று, மேற்குறிப்பிட்டுள்ள தகுதியுடைய **452** பயனாளிகளுக்கு முதியோர் ஓய்வூதியம் / விதவை உதவித்தொகை பெறுவதற்காக வறுமைக் கோட்டிற்கு கீழ் உள்ளோர் பட்டியல் எண் வழங்க மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு : அனுமதிக்கலாம். **எண். 1748/2012/எம்.இ.6**

**மாநகர மன்ற தீர்மானம் எண் 313 நாள் 28.12.2012**

அலுவலகக் குறிப்பிற்கு அனுமதி அளித்து தீர்மானிக்கப்பட்டது

---

**பொருள் எண் 8**

பொருள் : கோவை மாநகராட்சி - மேற்கு மண்டலம் - குடிநீர் பிரிவு சிறுவாணி குடிநீர் விநியோகம் குறைந்துவிட்டபடியால் பில்லூர் குடிநீர் விநியோகம் மேற்கொள்ள சங்கனூர் பள்ளத்தில் இருந்து மேட்டுப்பாளையம் சாலை வரை M.S. குழாய் பதித்தல் பணிக்கென தயாரிக்கப்பட்ட மதிப்பீடு ரூ.64.60 இலட்சத்திற்கு மாமன்றத்தின் நிர்வாக அனுமதி கோருதல்.

கோவை மாநகராட்சி, மேற்கு மண்டலம் வார்டு எண்கள் 10, 11, 12, 13, 14, 22, 23, 24 ஆகிய பகுதிகளில் தற்போது சிறுவாணி குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. இந்த வருடம் சிறுவாணி அணைப் பகுதிகளில் போதிய அளவு பருவ மழை பெய்யாததால் சிறுவாணி அணையின் நீர் மட்டம் கடந்த ஆண்டை விட (877.75 மீ) தற்போது அணையின் நீர்மட்டம் 868.39 மீட்டராக உள்ளது.

குடிநீர் வினியோகம் சீரான முறையில் விநியோகம் செய்ய வணக்கத்திற்குரிய மேயர், ஆணையாளர், மாநகராட்சி குடிநீர் பொறியாளர்கள் மற்றும் தமிழ்நாடு குடிநீர் வாரிய பொறியாளர்கள் கலந்து கொண்ட ஆய்வுக் கூட்டம் 14-12-2012 அன்று மாநகராட்சி கூட்ட அரங்கில் நடைபெற்றபோது வணக்கத்திற்குரிய மேயர் அவர்களின் அறிவுரைகளின்படி சிறுவாணி குடிநீர் விநியோகம் செய்யப்பட்ட பகுதிகளுக்கு பில்லூர் குடிநீர் விநியோகம் செய்ய நடவடிக்கை மேற்கொள்ள அறிவுறுத்தப்பட்டது.

தற்போது R.G. நகர் தரைமட்ட நீர் தேக்க தொட்டியில் இருந்து பில்லூர் குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. மேற்கண்ட இடத்திலிருந்து பாரதி பூங்காவில் உள்ள தரை மட்டத் தொட்டிக்கு இணைப்பு ஏற்படுத்தப்பட்டு தினமும் 5 மில்லியன் லிட்டர் குடிநீர் மின் மோட்டார் மூலம் சிறுவாணி குடிநீருக்கு பதிலாக பில்லூர் குடிநீர் வார்டு எண்.10, 11, 12, 13, 14, 22, 23, 24 ஆகிய பகுதிகளுக்கு குடிநீர் விநியோகம் செய்யவும், சங்கனூர் பள்ளத்தில் இருந்து மேட்டுப்பாளையம் சாலை வரை சுமார் 500 மீட்டர் நீளத்திற்கு M.S. குழாய் பதிக்க தயாரிக்கப்பட்ட மதிப்பீடு ரூ.64.60 இலட்சத்திற்கு மாமன்றத்தின் நிர்வாக அனுமதி வேண்டி பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு - அனுமதிக்கலாம் ந.க.எண். 13811/2012/எம்டி2

**மாநகர மன்ற தீர்மானம் எண் 314 நாள் 28.12.2012**

அலுவலகக் குறிப்பிற்கு அனுமதி அளித்து தீர்மானிக்கப்பட்டது

---

## பொருள் எண் 9

பொருள் : கோயம்புத்தூர் மாநகராட்சி வடக்கு மண்டலத்திற்குட்பட்ட வார்டு எண். 3 மற்றும் 31 –லுள்ள வணிகவளாக கடைகள் - பொது மறுமின் ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி பெறப்பட்டது – மாமன்ற ஒப்புதல் கோருவது – தொடர்பாக.

பார்வை : ஆணையாளர் அவர்களின் உத்தரவு நாள். 27.12.2012.

---------------

கோயம்புத்தூர் மாநகராட்சி வடக்கு மண்டலத்திற்குட்பட்ட கீழ்குறிப்பிட்டுள்ள வணிக வளாகங்களில் காலியாக உள்ள கடைகளுக்கு 20.12.2012ம் தேதியில் நடைபெற்ற மறு மின் ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளியில் கீழ்குறிப்பிட்டுள்ளவாறு உயர்ந்தபட்ச ஏலக் கோரிக்கை பெறப்பட்டுள்ளது.

| வ. எண் | ஏலதாரர் பெயர் | வணிக வளாகம் கடை எண் | அரசு மதிப்பு | தற்போது பெறப்பட்ட ஏலக் கோரிக்கை |
|---|---|---|---|---|
| 1 | திரு.சுரேஷ் குமார் | வார்டு எண். 3. கடை எண் 1 சுப்பிரமணியம்பாளையம் | ரூ.2400/- | ரூ.1900/- |
| 2 | திரு.பி.கண்ணன் | வார்டு எண். 31. கடை எண் 3 விளாங்குறிச்சி ரோடு | ரூ.15000/- | ரூ.15300/- |

மேற்குறிப்பிட்டுள்ளவாறு கடைகளில் வரிசை எண் 2ல் உள்ள கடைக்கு அரசு மதிப்பினைக்காட்டிலும் கூடுதலாக ஏலம் கோரப்பட்டுள்ளது. வரிசை எண் 1ல் உள்ள கடைக்கு அரசு மதிப்பினைக் காட்டிலும் குறைவாகவே ஏலம் கோரப்பட்டது. இருப்பினும் இக்கடைக்கு தொடர்ந்து ஆறு முறை ஏலம் விடப்பட்டும் அரசு மதிப்பிற்கும் குறைவாக ஏலக்கோரிக்கை கோரப்பட்டுள்ளது. ஆறு முறை ஏலம் விடப்பட்டுள்ளது. வருவாய் இழப்பினை கருத்தில் கொண்டு ஜனவரி 2013 முதல் மேற்படி ஏலக்கோரிக்கைகளை ஏற்று கடைகளை ஒப்படை செய்வதற்கு வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழு தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று மாமன்ற ஒப்புதலுக்கு பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு :- அனுமதிக்கலாம் ந.க.எண். 6508/2012/அ1

## மாநகர மன்ற தீர்மானம் எண் 315 நாள் 28.12.2012

அலுவலகக் குறிப்பிற்கு அனுமதி அளித்து தீர்மானிக்கப்பட்டது

---

## பொருள் எண் 10

பொருள் : கோயம்புத்தூர் மாநகராட்சி மத்திய மண்டலத்திற்குட்பட்ட வார்டு எண். 50-ல் உள்ள வணிகவளாக கடைகள் - பொது மறுமின் ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி பெறப்பட்டது – மாமன்ற ஒப்புதல் கோருவது – தொடர்பாக.

பார்வை : ஆணையாளர் அவர்களின் உத்தரவு நாள். 27.12.2012.

-------------

கோயம்புத்தூர் மாநகராட்சி மத்திய மண்டலத்திற்குட்பட்ட கீழ்காணும் மாதவாடகை கடைகளுக்கு 20.12.2012-ம் தேதி மறுமின் ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி நடைபெற்றது.

| வ. எண் | இனம் | 08.11.2012-ல் நடைபெற்ற ஏலத்தில் பெறப்பட்ட உயர்ந்த பட்ச ஏலத் தொகை ரூ. | 20.12.2012-ல் நடைபெற்ற ஏலத்தில் பெறப்பட்ட உயர்ந்த பட்ச ஏலத் தொகை ரூ. | ஏலதாரர் பெயர் |
|---|---|---|---|---|
| அ | வார்டு எண்.50, டாடாபாத் ராஜு ரோட்டில், உள்ள வணிக வளாக கடை எண்.3 (339.07சதுரடி) (BASE VALUE ரூ.1,9000/-) | 19,000/- (ஒப்பந்தப்புள்ளி) திரு.J.ராஜ்குமார் | 27,500/- (ஒப்பந்தப்புள்ளி) | திரு.S.டேவிட் எங்கல்பர்ட் |
| ஆ | வார்டு எண்.50, டாடாபாத் ராஜு ரோட்டில், உள்ள வணிக வளாக கடை எண்.4 (339.07சதுரடி) (BASE VALUE ரூ.17,100/-) | 17,100/- (ஒப்பந்தப்புள்ளி) திரு.M.வெள்ளைச்சாமி பாண்டியன் | 27,700/- (ஒப்பந்தப்புள்ளி) | திரு.S.டேவிட் எங்கல்பர்ட் |
| இ | வார்டு எண்.50, டாடாபாத் ராஜு ரோட்டில், உள்ள வணிக வளாக கடை எண்.5 (339.07சதுரடி) (BASE VALUE ரூ.18,100/-) | 18,100/- (ஒப்பந்தப்புள்ளி) திரு.K.சொர்ணலிங்கம்) | 27,900/- (ஒப்பந்தப்புள்ளி) | திரு.S.டேவிட் எங்கல்பர்ட் |

மேற்படி இனங்களில் அ முதல் இ வரை உள்ள கடைகளுக்கு மூன்று முறை ஏலம் (05.10.2012, 08.11.2012 மற்றும் 20.12.2012-ல்) நடைபெற்றது. 20.12.2012-ல் நடைபெற்ற மறு ஏலத்தில் அரசு மதிப்பைக்காட்டிலும் கூடுதலாக மின்ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி பெறப்பட்டுள்ளது. நான்கு முறை ஏலம் விடப்பட்டுள்ளது. வருவாய் இழப்பினை கருத்தில் கொண்டு ஜனவரி 2013 முதல் மேற்படி கடைகளை ஒப்படை செய்வதற்கு வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழு தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று மாமன்ற ஒப்புதலுக்கு பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு :- அனுமதிக்கலாம் ந.க.எண்.9659/10/அ1(ம)

**மாநகர மன்ற தீர்மானம் எண் 316 நாள் 28.12.2012**

அலுவலகக் குறிப்பிற்கு அனுமதி அளித்து தீர்மானிக்கப்பட்டது

---

**பொருள் எண் 11**

பொருள் : கோயம்புத்தூர் மாநகராட்சி மத்திய மண்டலம் - வார்டு எண். 83 முத்து விநாயகர் கோவில் ரோடு வணிகவளாக கடைகள் ஒதுக்கீடு செய்யப்பட்டு மூன்றாண்டுகள் முடிவுற்ற கடைகளுக்கு 15 சதவீதம் வாடகை உயர்வு செய்யும் மற்றும் ஒன்பது ஆண்டுகள் முடிவடைந்த கடைகளுக்கு அரசின் ஆணைப்படி வாடகையை உயர்வு செய்து உரிமம் புதுப்பிதல் - தொடர்பாக.

பார்வை :

1. அரசாணை எண். 147 ந.நி.ம.கு.வ. (நநி4) துறை நாள். 30.12.2000.
2. அரசாணை எண்.92 ந.நி.ம.கு.வ துறை நாள். 03.07.2007.
3. வ.வி.ம.நி.குழு தீர்மான எண்.129 நாள்.22.10.2012.

*******

பார்வையில் 1 மற்றும் 2-ல் கண்ட அரசாணைகளின்படி நகர்புற உள்ளாட்சி அமைப்புகளுக்கு சொந்தமான கடைகளை பொது ஏலம் விடுவதை தவிர்த்து குத்தகையினை நீடித்தல் குறித்து நெறிமுறைகளை பின்பற்ற உத்திரவிடப்பட்ட 30.12.2000-ம் தேதிய நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (ந.நி.4) துறை அரசு ஆணை எண்.147-க்கு இணங்க மாமன்ற தீர்மான எண்.164 நாள். 28.10.2004-ன்படி மாதாந்திர உரிமக் கட்டணம் நிர்ணயம் செய்யப்பட்டு வசூல் செய்யப்பட்டு வருகிறது. கடைகளின் உரிமக்காலம் முடிவடைவதால் அரசாணை (நிலை) எண்.92-நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள். 03.07.2007-ன் படி புதுப்பித்து 15% உயர்வு செய்து மாத வாடகை நிர்ணயம் செய்யவும் 9 ஆண்டுகள் முடிவடைந்த கடைகளுக்கு அரசாணையின் படி பொதுப்பணித்துறை வாடகை மதீப்பிடுகளின் அடிப்படையில் வாடகை நிர்ணயம் செய்யவும் உத்தரவிடப்பட்டுள்ளது.

பார்வை 3-ல் காணும் வரி விதிப்பு மற்றும் நிதிக்குழு தீர்மான எண். 129 நாள். 22.10.2012-ன்படி

1. அரசாணை எண். 92 ந.நி.ம.கு.வ துறை நாள். 03.07.2007-ல் தெரிவித்து உள்ளவாறு ஒதுக்கீடு பெற்று 9 ஆண்டுகள் முடிவடைந்த கடைகளுக்கு வெளிசந்தை மதிப்பில் வாடகை உயர்வு செய்யவும் 9 ஆண்டுகள் முடிவடையாத கடைகளுக்கு 15% வாடகை உயர்வு செய்யவும் மாமன்றத்திற்கு பரிந்துரை செய்து தீர்மானிக்கப்பட்டது.

2. கடைகள் பற்றிய முழு விவரங்களுடன் மாமன்றத்திற்கு பொருள் வைத்து ஒப்புதல் பெற தீர்மானிக்கப்பட்டது.

அதன் அடிப்படையில் மத்திய மண்டலத்திற்குட்பட்ட வார்டு எண். 83-ல் முத்து விநாயகர் கோவில் ரோட்டிலுள்ள 18 மாநகராட்சி வணிக வளாக கடைகளில் கடை எண். 5-யினை ஒதுக்கீடு செய்து ஒன்பது ஆண்டுகள் முடிவுற்றதால் பொதுப் பணித்துறையின் வாடகை மதிப்பீட்டின் அடிப்படையிலும், மற்ற 15 கடைகளுக்கு 15% வாடகை உயர்வும் செய்யலாம்.
கடை எண். 3 மற்றும் 4 வாடகை நிலுவை காரணமாக மாநகராட்சியால் பூட்டி சீல் வைக்கப்பட்டது. மேற்படி கடைகளை பொது மின் ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோரலாம். (பட்டியல் இணைக்கப்பட்டுள்ளது) உயர்வு செய்யப்பட்ட வாடகையினை நிர்ணயம் செய்யவும் மற்றும் வித்தியாச நிலுவை வாடகையினை வசூல் செய்யவும், இத்துடன் சேவை வரி 12.36% -யினை செலுத்துவதற்கு ஒப்புக்கொள்ளும் உரிமதாரர்களுக்கு கடையினை புதிய வாடகை அடிப்படையில் உரிமம் புதுப்பித்து ஒப்படைக்கவும், ஒப்புக்கொள்ளாத உரிமதாரர்களின் கடைகளின் உரிமத்தை ரத்துசெய்து மறுஏலத்திற்கு கொண்டுவரவும், மாமன்றத்தின் அனுமதி வேண்டி பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு ஒப்புதல் அளிக்கலாம் ந.க.எண்.10119/2012/அ1 (ம)

**மாநகர மன்ற தீர்மானம் எண் 317 நாள் 28.12.2012**

வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழு தீர்மானம் எண் 129 நாள் 22.10.2012ன் பரிந்துரையினை ஏற்று அலுவலகக் குறிப்பிற்கு ஒப்புதல் அளித்து தீர்மானிக்கப்பட்டது. மேலும் இப்பொருள் இணைப்பில் கண்டுள்ள வ.எண்.8 (கடை எண் 8)-ல் குறிப்பிட்டுள்ள ஐவர் ஆறுமுகம் (லேட்) என்பவர் பெயரிலுள்ள கடையை பெயர் மாற்றம் செய்து தருமாறு அன்னாரது வாரிசுதாரர் மாநகராட்சிக்கு கொடுத்துள்ள விண்ணப்பம் பரிசீலனையில் உள்ளது என்ற விவரமும் பதிவு செய்து தீர்மானிக்கப்பட்டது.

---

**பொருள் எண் 12**

பொருள்: பணியமைப்பு – கோயம்புத்தூர் மாநகராட்சி – எல்லை விரிவாக்கம் செய்யப்பட்டது – புதிய பணியிடங்கள் தோற்றுவித்தல் – அரசுக்கு பிரேரணை அனுப்ப மாமன்றத்தின் அனுமதி வேண்டுவது –தொடர்பாக.

பார்வை :
1. அரசாணை (நிலை) எண்.114, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (தேர்தல்) துறை நாள்.25.08.2011.
2. அரசாணை (நிலை) எண்.140, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (தேர்தல்) துறை நாள்.15.09.2011
3. நகராட்சி நிர்வாக ஆணையாளர் அவர்களின் கடித ந.க.எண். 44583/2012/எம்சிஎ1, நாள். 01.11.2012.
4. அரசாணை எண். 237, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (தேர்தல்) துறை நாள்.27.09.1996.

-------

பார்வை 1ல் கண்டுள்ள அரசாணையின் படி இம்மாநகராட்சியுடன் 3 நகராட்சிகள், 7 பேரூராட்சிகள் மற்றும் 1 ஊராட்சி இணைக்கப்பட்டுள்ளது. மேலும் பார்வை 2ல் கண்டுள்ள அரசாணையின்படி கோயம்புத்தூர் மாநகராட்சி தற்போது 5 மண்டலங்களாக பிரிக்கப்பட்டு 100 வார்டுகளுடன் செயல்பட்டு வருகிறது. பார்வை3ல் கண்டுள்ள நகராட்சி நிர்வாக ஆணையாளர் அவர்களின் கடிதத்தில் ஐந்தாவது மண்டலத்திற்கு தேவையான பணியாளர்களின் கருத்துருவை அனுப்பி வைக்கமாறு நகராட்சி நிர்வாக ஆணையாளர் அவர்கள் தெரிவித்துள்ளார். பார்வை 4ல் கண்டுள்ள அரசாணை எண்.237, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் தேர்தல் (துறை) நாள்.27.09.1996ன்படி, இம்மாநகராட்சியில் உள்ள நான்கு மண்டலத்திற்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள பணியிடங்களை போலவே பணியாளர்களை பணியமர்த்தப்பட வேண்டியுள்ளது. எனவே ஐந்தாவது மண்டலமான மத்திய மண்டலத்திற்கு மற்றும் விரிவாக்கம் செய்யப்பட்ட மாநகராட்சிக்கு அலுவலர்கள் மற்றும் பணியாளர்கள் கீழ்கண்டவாறு புதிதாக பொதுப்பணி, பொறியியல் பணி மற்றும் பொதுசுகாதாரப் பணிக்கு பணியிடங்களை தோற்றுவிக்கப்பட வேண்டியுள்ளது.

| வ.எண். | பதவியின் பெயர் | மாநகராட்சியில் தோற்றுவிக்கப்பட்ட பணியிடங்களின் எண்ணிக்கை | மாநகராட்சியுடன் இணைக்கப்பட்ட உள்ளாட்சி அமைப்புகளில் தோற்றுவிக்கப்பட்ட பணியிடங்களின் எண்ணிக்கை | எல்லை விரிவாக்கம் செய்யப்பட்டதால் தோற்றுவிக்கப்பட வேண்டிய பணியிடங்கள் | மொத்தம் (3+4) = 5 | கூடுதலாக தேவைப்படும் பணியிடங்கள் | குறிப்பு |
|---|---|---|---|---|---|---|---|
| **பொதுப் பணி** | | | | | | | |
| **வகுப்பு I** | | | | | | | |
| 1 | உதவி ஆணையாளர் (வார்டு) 15600-39100+5700 | 4 | - | 1 | 5 | 1 | தற்போது நான்கு மண்டலத்திற்கு ஒரு உதவி ஆணையாளர் (வார்டு) வீதம் 4 பேர் உள்ளனர். மேலும் புதிதாக உருவாக்கப்பட்டுள்ள மத்திய மண்டலத்திற்கு 1 உதவி ஆணையாளர் (வார்டு) பணியிடம் தேவைப்படுகிறது. |
| | **மொத்தம்** | **4** | **-** | **1** | **5** | **1** | |

| வ. எண். | வகுப்பு II | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | கணக்கு அலுவலர் 9300-34800+4600 | **3** | **-** | **5** | **8** | **5** | **பிரதான அலுவலகம்** பொதுக் கணக்குபிரிவு –1, குடிநீர் விநியோக பிரிவு –1 , சேமநல நிதிகணக்கு–1 மண்டல அலுவலகத்திற்கு ஒருவர் வீதம் –5 |
| 2 | நிர்வாக அலுவலர் 9300-34800+4600 | **4** | **-** | **2** | **6** | **2** | **பிரதான அலுவலகம்** பொதுப் பிரிவு – 1 மண்டல அலுவலகத்திற்கு ஒரு நிர்வாக அலுவலர் வீதம் –5 |
| | **மொத்தம்** | **7** | **-** | **7** | **14** | **7** | |

| வ. எண். | வகுப்பு III | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1. | கண்காணிப்பாளர் **9300–34800+4800** | 7 | – | 10 | 17 | 10 | **மைய அலுவலகம் – 7** பொதுப்பிரிவு–1, பொதுக் கணக்குபிரிவு –1, குடிநீர் விநியோக பிரிவு –1, நகர்நல பிரிவு –1, பொறியியல் பிரிவு –1, நகரமைப்பு பிரிவு –1, வருவாய் பிரிவு–1 **மண்டல அலுவலகத்திற்கு 2 பேர் வீதம்** பொது நிர்வாகம், நகர் நலம் மற்றும் பொறியியல் பிரிவு–1 வருவாய் பிரிவு மற்றும் நகரமைப்பு பிரிவு –1 |
| 2. | உதவி வருவாய் அலுவலர் 9300-34800+4800 | 4 | - | 2 | 6 | 2 | மண்டல அலுவலகத்திற்கு ஒரு உதவி வருவாய் அலுவலர் வீதம் – 5, வரியில்லா இனஙகளுக்கு –1 |
| 3. | உதவியாளர் /கணக்கர் 5200-20200+2800 | 36 | - | 24 | 60 | 24 | **மைய அலுவலகம் –22** பொதுப்பிரிவு–5, பொதுக்கணக்குபிரிவு –5, நகரமைப்பு பிரிவு –2, பொறியியல் பிரிவு–3, நகர்நல பிரிவு – 5, வருவாய் பிரிவு –1, மாமன்ற பிரிவு –1, நிலம் மற்றும் எஸ்டேட்–2 **மண்டல அலுவலகத்திற்கு 7 பேர் வீதம்** கணக்கு பிரிவு –1, வழக்கு –1, வருவாய்–2, பொறியியல் பிரிவு –1, நிர்வாகம் –1, பொது சுகாதாரம்–1 |
| 4. | நேர்முக உதவியாளர் 5200-20200+2800 | 2 | - | 1 | 3 | 1 | மேயர் – 1, ஆணையாளர் –1, துணை ஆணையாளர் –1. |
| 5. | சுருக்கெழுத்து தட்டச்சர் 5200-20200+2800 | 2 | - | 1 | 3 | 1 | மேயர் – 1, ஆணையாளர் –1, துணை ஆணையாளர் –1. |

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 6. | இளநிலை உதவியாளர் உடன் தட்டச்சர் 5200-20200+2400 | 105 | 8 | 71 | 184 | 71 | **மைய அலுவலகம் –34**<br>பொதுப்பிரிவு –4, பொதுக் கணக்கு பிரிவு–4,<br>குடிநீர் விநியோகம்–4, நகரமைப்பு பிரிவு–4,<br>பொறியியல் பிரிவு –4, நகர் நல பிரிவு –3, மக்கள் தொடர்பு அலுவலர்–1, வருவாய் பிரிவு–2, மாமன்ற பிரிவு–2, சட்டப் பிரிவு–2 நிலம் மற்றும் எஸ்டேட் –4<br>**ஒவ்வொரு மண்டல அலுவகங்களுக்கும் –30 வீதம் ஐந்து மண்டலங்களுக்கு**<br>வருவாய் பிரிவு–20, கருவூலம் –2, சம்பளப்பட்டியல் –2, சுகாதார பிரிவு –2, உதவிசெயற்பொறியாளர்–1, உதவி செயற்பொறியாளர் (திட்டம்) – 1, பொது நிர்வாகம் –2 |
| 7 | வரிவசூலர் 5200-20200+2400 | 72 | 6 | 22 | 100 | 22 | ஒரு வார்டுக்கு ஒரு வரிவசூலர் வீதம் 100 வார்டுகளுக்கு தேவைப்படுகின்றனர். ஏற்கனவே 78 பணியிடங்கள் தோற்றுவிக்கப்பட்டுள்ளதால் மேலும் 22 வரிவசூலர் பணியிடங்கள் தேவைப்படுகிறது. |
| 8. | துப்புரவுபணி ஆய்வாளர் 5200-20200+2400 | 72 | - | 28 | 100 | 28 | ஒரு வார்டுக்கு ஒரு துப்புரவு பணி ஆய்வாளர் வீதம் 100 வார்டுகளுக்கு தேவைப்படுகின்றனர். ஏற்கனவே 72 பணியிடங்கள் தோற்றுவிக்கப்பட்டுள்ளதால் மேலும் 28 துப்புரவு பணி ஆய்வாளர் பணியிடங்கள் தேவைப்படுகிறது. |
| 9. | ஓட்டுநர் 5200-20200+2400 | 34 | 4 | 201 | 239 | 201 | கோயம்புத்தூர் மாநகராட்சியில் உள்ள 239 வாகனங்களுக்கு ஓட்டுநர்கள் தேவைப்படுகிறது. |
| 10. | பதிவுரு எழுத்தர் 4800-10000+1400 | 15 | 3 | 8 | 26 | 8 | **மைய அலுவலகம் – 11**<br>பதிவறை –3, பொதுப் பிரிவு –2, பொதுக் கணக்கு பிரிவு –1, குடிநீர் விநியோகம் –1,<br>நகரமைப்பு பிரிவு –1, பொறியியல் பிரிவு–1<br>நகர் நலபிரிவு –1, நிலம் மற்றும் எஸ்டேட்–1<br>**மண்டலத்திற்கு 3 பேர் வீதம் ஐந்து மண்டலங்களுக்கு**<br>தபால் மற்றும் அனுப்புகை பிரிவு –1, பதிவறை–1,கருவூலம் –1 |
| 11. | துப்புரவு பணி மேற்பார்வையாளர் 4800-10000+1400 | 64 | 8 | 28 | 100 | 28 | ஒரு வார்டுக்கு ஒரு துப்புரவு பணி மேற்பார்வையாளர் வீதம் 100 நபர்கள் தேவைப்படுகின்றனர். ஏற்கனவே 72 பணியிடங்கள் தோற்றுவிக்கப்பட்டுள்ளதால் மேலும் 28 துப்புரவு பணி மேற்பார்வையாளர்கள் தேவைப்படுகிறது. |
| | **மொத்தம்** | **413** | **29** | **396** | **838** | **396** | |

| வ.எண். | பதவியின் பெயர் | மாநகராட்சியில் தோற்றுவிக்கப்பட்ட பணியிடங்களின் எண்ணிக்கை | மாநகராட்சியுடன் இணைக்கப்பட்ட உள்ளாட்சி அமைப்புகளில் தோற்றுவிக்கப்பட்ட பணியிடங்களின் எண்ணிக்கை | எல்லை விரிவாக்கம் செய்யப்பட்டதால் தோற்றுவிக்கப்பட வேண்டிய பணியிடங்கள் | மொத்தம் (3+4) = 5 | கூடுதலாக தேவைப்படும் பணியிடங்கள் | குறிப்பு |
|---|---|---|---|---|---|---|---|
| **பொதுப் பணி** | | | | | | | |
| **வகுப்பு IV** | | | | | | | |
| 1. | அலுவலக உதவியாளர் 4800-10000+1300 | 18 | 1 | 11 | 30 | 11 | **மைய அலுவலகம் –15** மேயர் அறை–2, துணை மேயர் –1, மாமன்ற பிரிவு –4, தபால் மற்றும் அனுப்புகை பிரிவு –3, ஆணையாளர் அறை–2, துணை ஆணையாளர் அறை –1, கருவூலம் –1, பதிவறை –1. மண்டல அலுவலகத்திற்கு 3 பேர் வீதம் ஐந்து மண்டலங்களுக்கு தேவைப்படுகிறது. |
| **மொத்தம்** | | **18** | **1** | **11** | **30** | **11** | |
| **பொறியியல் பணி** | | | | | | | |
| **வகுப்பு I** | | | | | | | |
| 1 | செயற் பொறியாளர் 15600-39100-6600 | 2 | - | 6 | 8 | 6 | (தலைமை பொறியாளர் நிலையில்) மண்டலத்திற்கு ஒருவர் வீதம் –5 குடிநீர் விநியோகம் –1,பாதாள சாக்கடை மற்றும் மழைநீர் திட்டம்– 1, திடக்கழிவு மேலாண்மை மற்றும் தெருவிளக்குகள்– 1. |
| **மொத்தம்** | | **2** | **-** | **6** | **8** | **6** | |
| **வகுப்பு II** | | | | | | | |
| 1. | உதவி செயற் பொறியாளர் (திட்டம்) 15600-39100+5600 | 4 | - | 8 | 12 | 8 | 10 வார்டுகளுக்கு ஒருவர் வீதம் –10, பிரதான அலுவலகம் –2. |
| 2. | உதவி செயற் பொறியாளர் 15600-39100+5600 | 5 | - | 7 | 12 | 7 | ஒவ்வொரு மண்டலத்திற்கும் ஒருவர் வீதம் –5பாதாள சாக்கடை திட்டம் –1, பாதாள சாக்கடை பராமரித்தல் –1, குடிநீர் விநியோக தலைமைப்பணிகள் –3, மின்பொறியாளர் (தெருவிளக்குகள்)–1, திடக்கழிவு மேலாண்மை–1 |
| 3. | உதவி பொறியாளர் / இளநிலை பொறியாளர் 9300–34800+4600 | 36 | 3 | 40 | 79 | 40 | இரண்டு வார்டுகளுக்கு ஒருவர் வீதம் –50, உதவி பொறியாளர்/இளம் பொறியாளர் ஒவ்வொரு மண்டலத்திற்கும் ஒருவர்–5 குடிநீர் விநியோகம் –6, மழைநீர் வடிகால் திட்டத்திற்கு–5, தெரு விளக்கு–5, பாதாள சாக்கடை திட்டம் –3. திடக்கழிவு மேலாண்மை–5 |
| | **மொத்தம்** | **45** | **3** | **55** | **103** | **55** | |

| வகுப்பு III | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1. | தொழில் நுட்ப உதவியாளர் 9300-34800+4200 | 4 | - | 75 | 79 | 75 | இரு வார்டிற்கு ஒருவர் வீதம் – 50,வகுப்பு I அலுவலர்களுக்கு –8 பூங்கா பராமரிப்பு–3, உதவி செயற் பொறியாளர் அலுவலகம் –12, உதவிப் பொறியாளர் குடிநீர்விநியோகம்– 6 |
| 2. | தேர்ச்சி திறன் உதவியாளர் நிலை I 5200-20200+2600 | 5 | - | 179 | 184 | 179 | பொருத்துனர்களாக பணிபுரிவர்கள் (தலைமை பணிகள்) – 67, பணிகளுக்காக ஒவ்வொரு வார்டுக்கும் ஒருவர் வீதம் – 100, மின் பணியாளர் வேலையில் (தலைமை பணிகள்) (STP,WTP) மண்டல அலுவலகங்களுக்கு–11,பாதாள சாக்கடை திட்டப்பணி ஆய்வாளர்–6 |
| 3. | தேர்ச்சி திறன் உதவியாளர் நிலை II 5200-20200+1900 | 36 | 1 | 200 | 237 | 200 | மின் கம்பியாளர் –50 , பணிகள் மற்றும் குழாய் பொறுத்துனர் இரு வார்டிற்கு ஒருவர் வீதம் –50, நகரமைப்பு பிரிவிற்கு சங்கிலி பணியாளர்கள் மண்டலத்திற்கு 4 நபர்கள் வீதம்–20 குடிநீர் விநியோகம் (STP)–5, 2000 குடிநீர் இணைப்புகளுக்கு ஒரு நீர்மானிகணக்கீட்டாளர் வீதம் – 112 |
| | **மொத்தம்** | **45** | **1** | **454** | **500** | **454** | |

| வகுப்பு IV | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1. | தேர்ச்சி திறனற்ற பணியாளர் 5200-20200+1900 | 703 | 18 | 469 | 1190 | 469 | ஆழ்குழாய் கிணறு இயக்குவதற்கு– 200, (6 ஆழ்குழாய் கிணறுகளுக்கு ஒரு நபர் வீதம் 1200 ஆழ்குழாய் கிணறுகளுக்கு) நீர்தேக்கத் தொட்டி இயக்குநர் – 300 (150 நீர் தேக்க தொட்டி இயக்குவதற்கு முறை மாற்ற அடிப்படையில் ஒரு முறை மாற்றத்திற்கு 2 நபர்கள் வீதம் 2 முறை மாற்றங்களில் பணிபுரிய ) நீர் தேக்க தொட்டி காவலர் –150, நீர் தேக்க தொட்டி மற்றும் குழாய் பராமரிப்பவர்கள் –75, குடிநீர் இணைப்பு துண்டிப்பு, மறு இணைப்பு வழங்குதல் மற்றும் மதகு திறத்தல் போன்ற பணிகளுக்கு – 280, அலுவலக பணிக்கும் காவலர் மற்றும் பராமரிப்பு பணிக்கு – 50, பாதாளசாக்கடை சுத்தம் செய்பவர்–50, பேருந்து நிலையம் –10, மார்க்கெட் பணிகளுக்கு –10, பூங்கா பராமரிப்பு – 50, திருமண மண்டபங்கள் பராமரிப்பு – 15 |
| | **மொத்தம்** | **703** | **18** | **469** | **1190** | **469** | |

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| **பொது சுகாதார பணி** | | | | | | | |
| **வகுப்பு III** | | | | | | | |
| 1. | சுகாதார ஆய்வாளர் 9300-34800+4200 | 24 | 3 | 23 | 50 | 23 | இரண்டு வார்களுக்கு ஒரு சுகாதார ஆய்வாளர் என்ற ரீதியில் **50** நபர்கள் தேவை. ஏற்கனவே **27** பணியிடங்கள் தோற்றுவிக்கப்பட்டுள்ளதால் மேலும் **23** பணியிடங்கள் தேவைப்படுகிறது. |
| 2. | ஆய்வு கூட தொழில் நுட்பாளர் **9300–34800+4300** | - | - | 1 | 1 | 1 | இம்மாநகராட்சியில் உள்ள பொது சுகாதார ஆய்வு கூடத்திற்கு **1** பணியிடம் தேவைப்படுகிறது. |
| 2. | களப்பணியாளர் 4800-10000+1300 | 11 | **-** | 14 | 25 | 14 | நான்கு வார்டுகளுக்கு ஒரு களப்பணியாளர் வீதம் **25** நபர்கள் தேவை. ஏற்கனவே **11** பணியிடங்கள் தோற்றுவிக்கப்பட்டுள்ளதால் கூடுதலாக **14** பணியிடங்கள் தேவைப்படுகிறது. |
| **மொத்தம்** | | **35** | **3** | **38** | **76** | **38** | |
| **வகுப்பு IV** | | | | | | | |
| 1. | துப்புரவு பணியாளர் 4800-10000+1300 | 2916 | 310 | 1474 | 4700 | 1474 | அரசு ஆணை எண்.**224** நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள் **11.09.07** அளவுகோலின் படி தேவைப்படும் பணியிடங்கள் **4700** தற்போது **3226** பணியிடங்கள் தோற்றுவிக்கப்பட்டுள்ளதால் கூடுதலாக **1474** பணியிடங்கள் தேவைப்படுகிறது. |
| | **மொத்தம்** | **2916** | **310** | **1474** | **4700** | **1474** | |

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| **பொறியியல் பிரிவில் புதிதாக தோற்றுவிக்கப்பட வேண்டிய பணியிடங்கள்.** | | | | | | | |
| **வகுப்பு –I** | | | | | | | |
| 1. | கண்காணிப்பு பொறியாளர் 37400-67000+8700 | - | - | 2 | 2 | 2 | குடிநீர் விநியோகம் **–1**, பாதாள சாக்கடை திட்டம் மழைநீர் வடிகால் , திடக்கழிவு மேலாண்மை , தெருவிளக்குகள் **– 1** |
| **மொத்தம்** | | **-** | **-** | **2** | **2** | **2** | |
| **பொதுசுகாதாரப்பிரிவில் புதிதாக தோற்றுவிக்கப்பட வேண்டிய பணியிடங்கள்** | | | | | | | |
| 1. | மண்டல சுகாதார அலுவலர் 9300-34100+4300 | - | - | 6 | 6 | 6 | மண்டல அலுவலகங்களுக்கு ஒருவர் வீதம், வெள்ளலூர் உரகிடங்கு**–1** |
| | **மொத்தம்** | **-** | **-** | **6** | **6** | **6** | |

| தோற்றுவிக்கப்பட வேண்டிய தகவல் தொழில் நுட்ப பணிகள் | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1. | முறை பகுப்பாய்நர் ( System Analyst) 15600-39100+5400 | - | - | 1 | 1 | 1 | |
| 2. | திட்ட அலுவலர் 9300-34800+4600 | - | - | 1 | 1 | 1 | |
| 3. | உதவி திட்ட அலுவலர் 9300-34800+4400 | - | - | 2 | 2 | 2 | |
| 4. | கணினி விவர பதிவாளர் 5200-20200+2000 | - | - | 55 | 55 | 55 | மைய அலுவலகம் –10, மண்டல அலுவலகத்திற்கு ஐந்து நபர்கள் வீதம் ஐந்து மண்டலத்திற்கு –25, பிறப்பு மற்றும் இறப்பு பதிவேடுகள் கணிணியில் பதிவு செய்வதற்கு 20 நபர்கள் |
| | **மொத்தம்** | - | - | 59 | 59 | 59 | |
| **தோற்றுவிக்கப்பட வேண்டிய நகரமைப்பு பிரிவு பணியிடங்கள்** | | | | | | | |
| 1. | உதவி ஆணையாளர் (நிலம் மற்றும் எஸ்டேட்) 15600-39100+5700 | - | - | 1 | 1 | 1 | |
| 2. | வட்டாட்சியர் 15600-39100+5400 | - | - | 1 | 1 | 1 | |
| 3. | துணை வட்டாட்சியர் 9300-34800+4800 | - | - | 1 | 1 | 1 | |
| 4. | நில அளவை ஆய்வாளர் 9300-34800+4600 | - | - | 1 | 1 | 1 | |
| 5. | நில அளவையர் 9300-34800+4300 | - | - | 5 | 5 | 5 | |
| | **மொத்தம்** | - | - | **9** | **9** | **9** | |

கோயம்புத்தூர் மாநகராட்சியில் பணிபுரிந்து வரும் பணியாளர்களுக்கான ஊதியம் மற்றும் ஒய்வூதியம் ஆண்டுக்கு ரூ. 101.29/– கோடி வழங்கப்பட்டு வருகிறது. மேலும் உதவி ஆணையாளர் கணக்குகள் அவர்களின் அலுவல்சாரக்குறிப்பு ந.க.எண்.7031/2012/பி4, நாள். 09.10.2012ன்படி இம்மாநகராட்சியின் 2012–2013ம் ஆண்டின் நிதிநிலை அறிக்கையின் படி இம்மாநகராட்சியின் மொத்த வருவாயில் 32.09% சதவிகிதம் பணியாளர்களுக்கான ஊதியம் மற்றும் ஓய்வூதியம் வழங்கப்பட்டு வருகிறது என தெரிவித்துள்ளார்.

கோயம்புத்தூர் மாநகராட்சியில் அனைத்து பிரிவுகளிலும் குறிப்பாக பொறியியல் பிரிவு, சுகாதார பிரிவு, அமைச்சு பணியிடங்கள் ஆகியவற்றில் பணியாளர்கள் பற்றாக்குறை உள்ளது. கூடுதலாக பணியாளர்களை நியமித்தால் நிர்வாகத்தை மேலும் செம்மையாக நடத்தலாம். கோயம்புத்தூர் மாநகராட்சியில் தற்போது புதிதாக தோற்றுவிக்கப்பட்டுள்ள மத்திய மண்டலத்தில் அலுவலர்கள் மற்றும் பணியாளர்களுக்கான பணியிடங்கள் தோற்றுவிக்கபடாத காரணத்தினால் இம்மாநகராட்சி ஏற்கனவே நான்கு மண்டல அலுவலகங்களிலும் தோற்றுவிக்கப்பட்ட பணியாளர்களை கொண்டு அலுவலகப் பணிகள் மற்றும் துப்புரவு பணிகளை மேற்கொள்ள வேண்டிய சூழ்நிலை உள்ளது. எனவே இம்மாநகராட்சியில் புதிதாக தோற்றுவிக்கப்பட்டுள்ள மத்திய மண்டலம் மற்றும் விரிவாக்கம் செய்யப்பட்டுள்ள இம்மாநகராட்சிக்கு அலுவலர்கள் மற்றும் பணியாளர்களை நியமித்தால் நிர்வாகத்தை செம்மையாக நடத்தலாம்.

எனவே மேற்கண்ட **2987** பணியிடங்களை தோற்றுவிக்கும்பட்சத்தில், ஒவ்வொரு பதவிக்கும் சம்பளவிகிதம் கணக்கிடப்பட்டதில் ஆண்டுக்கு கூடுதலாக ரூ.**46.83/–** கோடி செலவு ஏற்படும். புதிதாக தோற்றுவிக்கப்படும் **2987** பணியிடங்களுக்கு வழங்கப்படும் ஊதியத்தினையும் சேர்த்து ஆண்டுக்கு மொத்த செலவினம் ரூ.**148.09** கோடி ஆகும். இது மாநகராட்சி மொத்த வருவாயில் **46.94%** சதவீதம் ஆகும்.

இம்மாநகராட்சியில் உள்ள நகர் நல மையங்கள், மருத்தகங்கள், சித்தா மருத்தகங்கள் ஆகியவற்றிக்கு புதிய பணியிடங்கள் தோற்றுவிக்க தனியாக கருத்துரு அனுப்பிவைக்கப்படும் என தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

கோயம்புத்தூர் மாநகராட்சியில் புதிதாக உருவாக்கப்பட்டுள்ள ஐந்தாவது மண்டலத்திற்கு மற்றும் விரிவாக்கம் செய்யப்பட்ட இம்மாநகராட்சிக்கு மொத்தம் **2987** பணியிடங்களை தோற்றுவிக்க அரசுக்கு பரிந்துரை செய்ய நகராட்சி நிர்வாக ஆணையாளர் அவர்களின் மூலமாக செயற்குறிப்பு அனுப்பிவைக்க மாமன்றத்தின் ஒப்புதலுக்காக பொருள் சமர்ப்பிக்கப்படுகிறது.

அலுவலககுறிப்பு : **அனுமதிக்கலாம்.** ந.க.எண்.**5734/2011**/எம்.சி**2)**

**மாநகர மன்ற தீர்மானம் எண் 318 நாள் 28.12.2012**

அலுவலகக் குறிப்பிற்கு அனுமதி அளித்து தீர்மானிக்கப்பட்டது

---

(ஒப்பம்) செ.ம.வேலுசாமி
மேயர்
கோயம்புத்தூர் மாநகராட்சி